
சொஸைட்டி
பிக்சர்ஸாரின்
உலகம்

"உலகம்"—தமிழ்

"ப்ரபஞ்சம்"—தெலுங்கு

# அதிர்ஷ்டப் பரிசுப் போட்டி

மொத்த ரொக்கப்பரிசு ரூ. **1,00,000** (ஒரு லக்ஷம்)

போட்டிப் பரிசு ரூ. **50,000**    போனஸ் பரிசு ரூ. **50,000**

## போட்டி

முதற் பரிசு (சரியான விடை) ரூ. 25,000

2-வது பரிசு (ஒரு தப்புள்ள விடை) ரூ. 15,000

3-வது பரிசு (2 தப்புள்ள விடை) ரூ. 10,000

இந்தப் போட்டியின் விடை "சீல்" இட்ட கவரில் சென்னை 'ஈஸ்டர்ன் பாங்க் ஆப் இந்தியா'வில் 'டிபாசிட்' செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

## போனஸ்

(நிறையக் கூபன்கள் அனுப்புகிறவர்களுக்கு)

முதற் பரிசு ரூ. 10,000.
2-வது பரிசு ரூ. 7,500.
3-வது பரிசு ரூ. 5,000.
4-வது பரிசு ரூ. 3,000.
5-வது பரிசு ரூ. 2,000.
6-வது பரிசு ரூ. 1,000.
7-வது பரிசு ரூ. 750.
8-வது பரிசு ரூ. 500.
9-வது பரிசு ரூ. 250.
(தவிர)

நூறு '100' ரூபாய் பரிசுகள். இருநூறு '50' ரூபாய் பரிசுகள்.

**முடிவு தேதி 31—12—1953.**

கேள்விகள்.

I. மிகவும் உருக்கமான பாத்திரம் எது?
(1) மீனு (2) பத்மா (3) லலிதா (4) லீலா (5) பிரேமா


II. மிகவும் உருகச் செய்யும் பாத்திரம் எது?
(1) சபாபதி (2) சங்கர் (3) மோகன் (4) சந்தர்

III. கீழ்க்கண்ட பாடல்களுள் ரசம் மிகுந்த பாடல் எது?
(1) மனம்போல் உல்லாசமாய் (2) காதலினால் உலகமே
(3) இசைபாடி நானுமே (4) பெண்பிள்ளை கிட்டே
(5) உன் காதலால்

தொடர்ச்சி: பின் அட்டையில் காண்க

சொஸைட்டி பிக்சர்ஸாரின்

# உலகம்



களிப்பூட்டும் கதை
கண் கவரும் கலை

காதுக்கினிய கானம்
பட உலகில் ஒரு
புது முயற்சி



தங்கம் (வசனம்) : ஆம்பளைக்கு நிகர் பொம்பளையானாலும்
அடங்கும் முறை கொஞ்சம் வேணும——நீங்க
அதிகாரம் செய்திட வேணும்——அதிலே
அன்பும் கலந்திடவேணும்——அதனாலே

பாட்டு : மண்ணை உழுகிற ஏருலே கட்டின மாடுகள்
ரெண்டையும் போலே
பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கை
நடத்தின பேரின்பமே
அதனாலே —— நீங்க சொன்னதெல்லாம்
ரொம்ப சரிதான்.

ரத்னம் : ரொம்பச் சரிதான்.

தங்கம் : அப்பச் சரிதான்.



இருவரும்: ரெண்டு —— கண்
களைப் போலே
ஒண்ணாக வாழ்வதில்
இன்பம் தானே
(எம்புட்டு)

பாட்டு 13. சந்தர்.


தொகையறு : துயராற்றே எனை நீ ஈன்றுயே உயிர்தந்த
என் அமுதே, நீ மாண்டாய், துணை யாராமோ
விதி யீதோ சொலாய் தாயே.

பாட்டு : விதி யீதோ சொலாய் தாயே
கதி யிலியாய்த் திகைத்தேனே
உலகமதிலே அநாதை, தனயன்
இனி நான் யாது செய்வேனே——நின்
தனயனும் யாது செய்வேனே

நிலா போலே எந்நாளும் வாழ்வில்
ஜோதி பொழியும் ஒளியே நீ
இராதே தாய்மை தனக்கு நிகர்
இனி நான் யாது செய்வேனே—— (நின்)

அன்பால் எனையே வளர்த்தாள், எது தான்
என் தாய்க்கு நிகராமோ
என் நினைவே யானதே கனவாய்
இனி நான் யாது செய்வேனே—— (நின்)

பாட்டு 14. சந்தர்—பிரேமா டூயட்.



உன் காதலால் என் அன்பெலாம்
நீ தானே அடைந்தாய்
இது ஆசை மீறும் பந்தமே
இனியென்னை யணைப்பாய் (இது)
பூலோகம் அதிலே மலரும்
வாழ்க்கையின் பூக்கள்
என் ஹ்ருதயத்தினுள்ளே பூக்குமே
அதை நீயே முகர்வாய் (இது)
உனதானந்த வாழ்க்கை எனதே
காண்பேனே இன்பம்
வருவாய் நீ என் உயிர்ப் பாகமே
வருவாய் என் அருகில் (இது)

பாட்டு 15. சந்தர்—பிரேமா.

சந்தர் (தொகையறு) : என் ப்ரேம ராணி காதலினாலே

பாட்டு : ப்ரேமையின் ராணி காதலினாலே
தேடி யலைந்தேன் வாழ்விலே
உள்ளம் உடைந்தேனே

பிரேமா : வாழ்க்கையின் கடலில் சுழல்வது ப்ரேமை
தணியா மனம் அலை மோதுதே காதல் விளைவாலே

சந்தர் : எனக்கேது சுகம் புவிமீதினிலே
உயர் காதலினால் நான் மாய்வதா ?
கருமேகமதே மழையாவதுபோல்
கடுந்துயர் சுகமாகாதா.

பிரேமா : என் காதலுமே இருளாவதா
என் வாழ்க்கையுமே பறிபோவதா ?
தனிமையில் வாடும் பூவினைப்போலே
ஆவி உலர்ந்தே வாடுதே உள்ளம் உடைந்தேனே

சந்தர் : என் அன்பினில் ஊறும் அமுதமே நீ
இனி உனை அடைவேனோ உலகினிலே
பாராய் எனை ஏனோ சொல்
பாராய் எனை ஏனோ சொல்வாயே
பிரிவால் நமதுடலே வாடுவதா
பிரிவால் நமதுயிரும் வீழ்வதா

பிரேமா : விதி வலிதே என் செய்வதோ நாமும்
அந்தோ நம் நிலை பரிதாபமே——
உள்ளம் உடைந்தேனே.

(சுபம்).

Associated Printers (Madras) Ltd.,

IV. மிகவும் மனமுருக்கும் பாடல் எது ?
(6) அழகான பூமிதனிலே (7) புவி வாழ்வு இதோ (8) அன்னே அனே (9) துயருற்றே எனே (10) என் ப்ரேம ராணி

V. சிறந்த நாட்டியப் பாட்டு எது ?
(11) என் ஜீவனிலே (12) இந்தத் தள்ளாடும் (13) தெக் கத்திக் கள்ளனடா (14) திந்தின்னு (15) கலேயே உயிர்த்துணேயே

VI. மேலே குறிப்பு III, IV, V, இவைகளில் வரிசைக் கிரமமாய் எண் கொடுக்கப் பட்டிருக்கும் 15 பாடல்களில் சிறந்த பாட்டு எது ?

**விதிகள்**

1. இந்தப் போட்டிக்குப் பிரவேசக் கட்டணம் இல்லே. ஆனல் 'உலகம்' தமிழ்ப் படமோ, 'ப்ரபஞ்சம்' தெலுங்குப் படமோ பார்ப்பவர்களுக்குத் தியேட்டரில் தரப்படும் டிக்கட்டின் ஒரு பாகத்தை (எந்த வகுப்பு டிக்கெட்டானலும் சரி) போட்டி நேயர்கள் ஒவ்வொரு கூபனுடனும் இணேத்து அனுப்பவேண்டும்.

2. ஒரு கூபனுக்கு ஒரு டிக்கட். ஒருவர் எத்தனே கூபன் களேனும் அனுப்பலாம். ஆனல் அத்தனேக்கத்தனே டிக்கட்டு கள் இணேக்கப் படவேண்டும்.

3. விடைகளேத் தனி வெள்ளேக் காகிதத்தில் மையினல் எழுதவேண்டும். விடைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எண்களே மட்டும் எழுதினல் போதும். கேள்விகளும், விடை எண்களும் தமிழ்—தெலுங்கு இரண்டு படங்களிலும் ஒன்றே.

4. போட்டியின் தீர்ப்பு சம்பந்தமாக யாதொரு கடிதப் போக்குவரத்தோ, பேட்டியோ கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ள இயலாது. கூபன்கள் தபாலிலோ, மற்றெவ்விதமோ தவறி விட்டால் அதற்குப் போட்டியதிபர் ஜவாப்தாரியல்ல. போட்டி விதிகளுக்கும், நிபந்தனேகளுக்கும், போட்டியதிபரின் முடிவான தீர்மானத்திற்கும் உட்பட்டுக் கட்டுப்பட்டவர்களே இப்போட்டியில் கலந்துகொள்ள வேண்டும். எவ்வகையிலும் போட்டி அதிபரின் தீர்ப்பே முடிவானதும், சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும்.

## விசேஷ அறிவிப்பு :

**விவரமான விதிகள் பிரசுரங்களில் பிரசுரிக்கப்படும்.**

**துண்டுப் பிரசுரங்களேத் தியேட்டரில் வாங்கிக்கொள்ளுங்கள் ! நீங்கள் வாங்கும் டிக்கட்டுகள் உங்களுக்கு அதிர்ஷ்டம் அளிக்கக் கூடும் என்பதை மறந்துவிடாதீர்கள் ! உங்கள் டிக்கட் ஜாக்கிரதை !**

*கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :*

**போட்டி அதிபர்,**

**'உலகம்' அதிர்ஷ்டப் பரிசுப் போட்டி.**

38, [illegible]

திரைக்கதை :

**மிஸஸ் ஸி. பி. முருஸ்.**

வசனம், பாட்டு :

**எம். எச். எம். முருஸ்.**

மற்றும் சில பாடல்கள் :
கவிகுஞ்சரம், கே. பி. காமாக்ஷி, பி. அனுமந்தராவ், குயிலன், தமிழ் ஒளி.

சங்கீதம் :
எம். எஸ். ஞானமணி
டி. பூர்ணனந்தம் (உதவி).

பின்னணி :
பி. ஏ. பெரியநாயகி, திருச்சி லோகநாதன், எம். எல். வசந்த குமாரி, ஏ. எம். ராஜா, என். எல். கானசரஸ்வதி, வி. என். சுந்தரம், பி. லீலா, கே. வி. மகாதேவன், பி. ஜி. கிருஷ்ண வேணி, எம். சத்தியம், எம். எஸ். ராஜேஸ்வரி, ஜி. கஸ்தூரி, டி. வஸந்தா.

நடன ஆசிரியர்கள் :
கே. கே. ஸிந்ஹா,
கே. மாதவன், ஜயசங்கர்.

ஆர்ட் :
வி. எம். வதூர்க்கர்.

அரங்க அமைப்பு :
புண்ணியகோடி

பெயிண்டிங் :
வி. ஏ. லோகநாதன்

ஆடை அலங்காரம் :
ஓ. கே. துரை.

மேக் அப் :
ஹரிபாபு, கே. வி. ஸ்வர்ணப்பா, ஆர். துரைசாமி.

எடிட்டிங் :
எல். எஸ். ராமச்சந்திரன்,
ஈ. தர்மலிங்கம் (அஸோஸியேட்)

ஒலிப் பதிவு :
வி. ஸி. சுப்பராமன்,
ஸி. பி. கன்னியப்பன்,
எஸ். ராஜகோபாலன்.

(உதவி) :
எஸ். என். கோபால்சாமி,
எம். எஸ். நாகேஸ்வரன்,
நாதன்.

ஒளிப் பதிவு :
ஆர். ஆர். சந்திரன்.

ஆப்பரேட்டிங் கேமராமேன் :
கே. எம். கோவிந்தன்.

அஸிஸ்டெண்ட் :
எஸ். என். மீனுட்சிசுந்தரம்.

புரொடக்ஷன் மானேஜர் :
எஸ். ராகவன்.

மானேஜர் :
எஸ். ராமஸுப்ரமணியம்.

அஸிஸ்டெண்ட் டைரெக்டர் :
வே. லக்ஷ்மணன்.

அஸோஸியேட் டைரெக்டர் :
எம். திருவேங்கடம்.

டைரெக்ஷன் :
எல். எஸ். ராமச்சந்திரன்.

நிர்வாகம் :
பி. ஆர். எஸ். பாபு.

மேற்பார்வை :

**எம். எச். எம். முருஸ்.**

## நடிகர்கள் :

வி. நாகய்யா
டி. ஈ. வரதன்
பி. எஸ். வீரப்பா
டி. கே. பகவதி
எஸ். எம். குமரேசன்
புளிமூட்டை ராமசாமி
எம். ஆர். சாமிநாதன்
ஈ. ஆர். சகாதேவன்
கே. துரைசாமி
எம். வி. மணி
கே. ஸாயிராம்
டி. கே. சம்பங்கி
டி. பி. பொன்னுசாமி பிள்ளை
ஜி. வி. சர்மா
நந்தாராம்
எம். எஸ். கருப்பையா
ஐயராம்
குஞ்சிதபாதம் பிள்ளை
டி. வி. சேதுராமன்
வி. டி. கல்யாணம்
ராஜு
எஸ். வி. ஷண்முகம்
பொட்டை கிருஷ்ணமூர்த்தி
எஸ். பீர்முகமது

## நடிகைகள் :

எம். வி. ராஜம்மா
பி. கே. சரஸ்வதி
எம். எஸ். திரௌபதி
டி. ஆர். ரஜனி
எம். லக்ஷ்மிப்ரபா
என். ஆர். சகுந்தலா
ஹி. கே. ஸரஸ்வதி
கே. எஸ். அங்கமுத்து
கே. அரங்கநாயகி
பி. சாரதாம்பாள்
என். திலகம்
எஸ். ஜயலக்ஷ்மி அம்மாள்
ஜி. சரோஜா
பேபி லக்ஷ்மி

*கோஷ்டி நடனம் :*

பி. சாந்தகுமாரி, டி. சரோஜா, என். டி. ராணி, ஜி. சுந்தரி, பிரதிபா, வி. சரோஜா, டி. எஸ். கமலா, டி. எஸ். ஜயந்தி, எம். எம். லீலா, என். கிருஷ்ணவேணி, கே. ராஜேஸ்வரி, வி. சரஸ்வதி, மீரா, கே. சரோஜா, சக்குபாய், பவானி.

*இராமிய நடனம் :*

குமாரி கமலா

*பரத நாட்டியம் :*

லலிதா—பத்மினி

*மற்போர் :*

தாராசிங்—அலி ரிஸா பே.

*மத்தியஸ்தர் :*

வாங் பாக் லீ.

---

*பிராஸஸிங் :*

விஜேய் ஸினி லெபாரட்டரீஸ் லிமிடெட், சென்னை-26.

*ஸ்டூடியோ :*

ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட் ஸ்டூடியோஸ், சென்னை-26.

Sound RCA System

# உலகம்

## கதைச் சுருக்கம்

உலகத்தின் கதை ஒரு குடும்பத்தின் பல தலைமுறைத் தத்துவங்களை விளக்கிக் காட்டும் விஸ்தாரமான கதை.

சாமானிய செல்வ நிலையில் உள்ள சபாபதி, மீனு என்னும் கட்டழகியைக் காதலித்துக் கடிமணம் செய்து கொள்ளுகிறான். இன்ப வாழ்க்கையின் சின்னங்களாகச் சங்கரும் மோகனும் பிறக்கிறார்கள். அதிர்ஷ்ட சக்கரத்தின் சுழற்சி வேகத்தில், சபாபதி ஐசுவரியமும் அந்தஸ்தும் அடைகிறான்.

முறுக்கான காளைப் பருவம் வரப்பெற்ற பிள்ளைகள் இருவருள் மூத்தவன் சங்கர், பெற்றோரின் இஷ்டப்படி பத்மா என்னும் பாவையை மணந்து கொள்ளுகிறான்.

நவநாகரிகத்தின் சின்னமான மோகனோ தன் கல்லூரித் தோழியான லலிதா தன்னிடம் சமர்ப்பிக்கும் காதலை ஏற்க மறுக்கிறான். பாரிஸ்டர் படிப்புக்காக மேல் நாடு செல்லும் லலிதா மோகனைப் பிரிய முடியாத வேதனையுடன், கண்ணீரும் கம்பலையுமாகப் பிரிந்து செல்லுகிறாள். அவள் கண் மறைந்தது தான் தாமதம், மோகன், ஸௌத் ஆப்ரிக்காவிலிருந்து ஊர் திரும்பியுள்ள தன் மாமன் மகள் லீலாவிடம் தன் அன்பைச் சொரிகிறான். அவ்வளவு சீக்கிரத்தில் அவனை ஏற்றுக்கொள்ள லீலாவின் பெண்மை தயங்குகிறது.

காலக்கிரமத்தில் சங்கர் சந்தர், ஸ்வர்ணு என்ற இரண்டு குழந்தைகளைப் பெறுகிறான். சபாபதியோ மரணத்தின் மூலம் நிரந்தரமான சாந்தி நிலையை அடைகிறான்.

வைத்தியக் கல்லூரியில் படிக்கும் லீலா மோகனுக்குத் தன் ஹிருதயத்தில் இப்பொழுது இடமளிக்கிறாள். பிரேமையுடன் பழகும் இக் காதலர்கள் மணம் புரியுமுன்னே மனமொத்து இன்பம் நுகர்ந்துவிடுகிறார்கள்.

இங்கிலாந்திலிருந்து பாரிஸ்டராகத் திரும்பிய லலிதாவோ மோகனை இன்னும் மறக்கவில்லை. அவனைப் பார்க்கில் சந்தித்துத் தன்னைக் காதலிக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறாள். லீலாவின் காதலனான மோகன் அவளைத் தன் தங்கையாகவே கருதுகிறான். நிராகரிக்கப்படும் லலிதா மோகனை அடையும் காதல் பைத்தியத்தால் ஒரு சூழ்ச்சித் திட்டம் வகுக்கிறாள்.

லீலாவிடம் செல்லும் அவள், "மோகன் என் காதலன்" என்று கூறி, அவள் மனத்தில் விஷ வித்தை விதைக்கிறாள். இதன் விளைவாக லீலாவுக்கு மோகனிடம் சந்தேகம் ஏற்படுகிறது. அதனால் அவள் மோகனை நிராகரித்து, லலிதாவிடமே போய்ச் சேரும்படி அவனைக் கடிந்து பேசுகிறாள். ஆயினும் பரிசுத்தமான மோகனுடைய ப்ரேமை அவளை வாட்டி வதைக்கிறது. உடனே லலிதாவிடம் சென்று மோகனைத் தனக்கு அளித்து விடும்படி கெஞ்சுகிறாள்; பின்பு வாதாடுகிறாள்; கடைசியில் மோகன் லலிதாவின் காதலன் அல்ல என்பதை அறிந்து, அவள் கன்னத்தில் அறைந்துவிட்டுத் தன் வீடு செல்லுகிறாள். களங்கமில்லாத மோகனின் இன்ப அறைகூவல் அவளை அவனிடம் இழுத்துச் செல்லுகிறது. மன்னிப்புக் கேட்கும் லீலாவை மன நிம்மதியுடன் ஏற்றுக் கொள்ளுகிறான் மோகன். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா!

லலிதா மோகனை அடைய மீண்டுமொரு முயற்சி செய்கிறாள். ஆண் உடை தரித்து, அர்த்த ராத்திரியில் மோகனை அணுகிக் காதற் பிச்சை கேட்கிறாள். அதன் விளைவும் தோல்வியே.

இதற்கிடையில் லீலா மோகனிடம் தான் அனுபவித்த இன்பத்தின் விளைவாகக் கருக் கொள்ளுகிறாள். கல்யாணமாவதற்கு முன் கர்ப்பம் ! இந்தப் பயம் அவளைக் கதி கலக்குகிறது. விஷய மறிந்த காலேஜ் டாக்டர் மிஸ் நிர்மலா, மோகனையே அவளுக்கு மணம் முடித்து வைக்கும் நோக்கத்துடன், அவனை லீலாவின் வீட்டுக்கு வரவழைக்கிறாள்.

லலிதாவோ மோகனை அடையத் தான் முற்பட்ட முயற்சிகளிலெல்லாம் தோல்வியே கண்டதன் விளைவாய், மனம் முறிந்து விஷம் அருந்த முனைகிறாள். ஆனால் நச்சுக் கோப்பையில் மின்னிய லீலாவின் முகம் லலிதாவை அவள்மீது 'பழி வாங்கும் பைத்திய'மாக மாற்றி விடுகிறது. கையில் எடுத்த கத்தியுடன் கண்மண் தெரியாமல் ஓடுகிறாள் பேதை லலிதா. டாக்டர் நிர்மலாவின் அவசர அழைப்புக்கு இணங்கிக் காரில் விரைந்து வரும் மோகன், வழியில் பதறிவரும் லலிதாவைப் பார்க்கவில்லை. தவறிவிடும் லலிதாவோ காரின் பயங்கர உருளைகளுக்குப் பலியாகிறாள். லலிதாவின் பரிதாப முடிவைப் பார்க்கும் லீலா மன அதிர்ச்சியால் கருச் சிதைவையடைகிறாள்.

போலீஸ் விசாரணையில் தவறு லலிதாவினுடையதே என்பது ருஜுவாகிறது. மோகனையும் லீலாவையும் மணமக்கள் ஆக்குகிறார் லீலாவின் தந்தை.

சில நாட்களுக்குப் பின் சகோதரர்கள் பிரிகிறார்கள். சங்கர் புது வீடு புகுகிறான்.

டாக்டரான லீலா சமூக சேவை செய்யும் சீர்திருத்த நோக்கத்துடன் தர்ம வைத்தியசாலை ஒன்றை ஸ்தாபிக்கிறாள்.

காலம் ஓடுகிறது. இருபது வயதான இளைஞன் சுந்தரையும், பதினாறே பிராயமுள்ள இளம் பெண் ஸ்வர்ணாவையும் தவிக்க விட்டுவிட்டு, பத்மா இறந்து விடுகிறாள். லீலா அந்தக் குழந்தைகளைக் கவனிக்கும் பொறுப்பை மேற்கொள்ளுகிறாள்.

மோகன் அமெரிக்காவுக்குச் செல்லுகிறான். களங்கமற்ற மனத்துடன் இளைஞன் சுந்தரோடு லீலா நெருங்கிப் பழகுகிறாள்; பந்தாடுகிறாள்; சீட்டாடுகிறாள்; ஓடத்தில் ஏறி உல்லாஸ யாத்திரை புரிகிறாள்.

மனைவி மறைந்த மாதம் இரண்டுக்குள் சங்கரை மறு மணம் புரிந்து கொள்ளும்படி கல்யாணத் தரகன் கோவிந்தசாமியின் துஷ்ட போதனை தூண்டுகிறது. அதற்கு இலக்கு ஆகிறாள் ஏழைக் குடியில் உதித்த நற்குண நங்கை ப்ரேமா. அவளுடைய எளிய வாழ்வில் விதி குறுக்கிடுகிறது ! சங்கரின் மறுமணக் கொள்கையை மறுக்கும் சுந்தரோ, தரகனைத் துரத்தி யடித்துத் தந்தையின் கோபத்திற்கும் ஆளாகிப் பின்பு வீட்டை விட்டே வெளியேறுகிறான்.

சங்கரை மணக்க மறுத்த பிரேமாவோ தன் உயிரை அற்பமாகக் கருதிக் கொந்தளிக்கும் கடலுக்குப் பலியாகும் எண்ணத்துடன் பாய்கிறாள். துயர வேதனையுடன் அங்கே வரும் சுந்தர், கடலில் பாய்ந்த கன்னியைக் காப்பாற்றி ஆஸ்பத்திரியில் சேர்க்கிறான்.

பிரேமா பிழைப்பதற்குச் சுந்தரின் இரத்தம் டாக்டர் லீலாவால் அவள் உடலில் செலுத்தப் படுகிறது. இச்சமயம் விசாரணை என்னும் கடமையை ஆற்ற வரும் இன்ஸ்பெக்டரைப் பிரேமாவின் மதிமயக்கும் அழகு ஆகர்ஷிக்கிறது.

உயிர் பிழைத்த பிரேமா தனக்கு அவ்வுயிரை அளித்த சந்தருக்குத் தன் உள்ளத்தை அளிக்கிருள்.

அமெரிக்காவிலிருந்து திரும்பும் மோகன் தன்னை விமான நிலையத்திலும், வீட்டிலும வரவேற்கத தவறும் லீலாவைப் பற்றிச் சிந்திக்கிருன். சந்தர்ப் பங்கள் அந்தச் சிந்தனைக்கு உணவளித்து வருகின்றன.

இயற்கையிலேயே பிரேமாவைக் காதலிக்கும் இன்ஸ்பெக்டர், கோவிந்த சாமியின் விஷ போதனையைத் தனக்கு இன்னும் பக்க பலமாகக் கொண்டு பிரேமாவை நெருங்குகிருர். இன்ப ஸ்பரிசத்தை எதிர்பார்த்தவருக அவளை அணுகும் இன்ஸ்பெக்டருக்குப் பெண்மைச் சீற்றத்தின் பலத்த அறை விழுகிறது. தன்னை மறுத்த பிரேமாமீது 'தற்கொலைக் குற்றம்' சாட்டி வழக்குத் தொடர் கிருர் இன்ஸ்பெக்டர். கோவிந்தசாமி தூண்டியதன்பேரில் சந்தரையும் பழி வாங்கச் சந்தர்ப்பம் தேடுகிருர் அவர்.

கோவிந்தசாமியின் சூழ்ச்சித் திட்டம் மேலும் உருவாகிறது. சந்தர்மீது சினங்கொண்ட அவன், லீலாவின் பரிசுத்தமான கற்புக்குப் பகட்டான களங்கம் கற்பித்துக் கையெழுத்திடாத கடிதம் ஒன்றை மோகனுக்கு அனுப்புகிருன்.

சந்தர்ப்பக் கோளாறுகளால் 'லீலா-சந்தர்' நடத்தையில் சந்தேகம் கொண்டிருந்த மோகன் ஆத்திரத்தின் உச்ச நிலையை அடைகிருன். குற்றமற்ற காதலியைக் கொலைபுரியுமளவுக்கு மதியிழக்கிருன். ஆனல் தக்க சமயத்தில் அங்கு வந்து சேரும் சந்தர், நிலைமையை மாற்றி, நேரிடவிருந்த ஒரு கொலையை யும், தற்கொலையொன்றையும் தவிர்க்கிருன்.

தந்தையைப் பிரிந்து லீலாவுடன் வாழ்ந்த சந்தர் இனி அந்த இடத்தையும் பிரிய நேர்கிறது. ஆறுதல் பெறவிரும்பும் அவன் தன் காதலி பிரேமாவைக் காணச் செல்கிருன். ஆனல் விதி அங்கேயும் குறுக்கிடுகிறது. பிரேமாவே தன் தந்தை மணக்கவிருந்த பெண் என்பதை அப்பொழுது அவன் அறிகிருன். "தாய்! தாய்!" என்று அலறித் திகிலுடன் அங்கிருந்து வெளியேறுகிருன். இப்பொழுதுதான் விதி அவனைப் பலமாகத் தாக்குகிறது. பிரேமாவின் தற் கொலைக்குச் சந்தரின் தூண்டுதலே காரணம் என்று பொய்க் குற்றம் சாட்டி, அவனைக் கைது செய்து சிறையில் தள்ளி இம்சை புரிகிருர் இன்ஸ்பெக்டர்!

சிறையில் இடக்கும் சந்தரின் கதி என்ன?

பிரேமாவின் மீது சாட்டப்பட்ட குற்றத்தின் வழக்கு என்ன ஆயிற்று?

டாக்டர் லீலா எடுத்துக்கொண்ட முயற்சி என்ன?

சங்கரின் மறுமணம் நடந்ததா, இல்லையா?

இன்ஸ்பெக்டருக்கு வெற்றியா தோல்வியா? போன்ற பிரச்னைகளை வெள்ளித் திரையில் கண்டு முடிவுக்கு வாருங்கள்!

சுபம்

# "உலகம்"

## [பாடல்கள்]

பாட்டு 1. சபாபதி-மீனா டூயட்.

மீனா : மனம்போல் உல்லாஸமாய் நாமே
மையல் கொண்டே சேரல் நலமே
இது முன்பே செய்த தவமே——நாம்
அன்பாய் வாழல் சுகமே.
ஆடியும் பாடியும் இன்றே தழுவிடல்
ஆனந்தம் தருமே.

சபாபதி : காதலை வளர்ப்பதில் உன் போல் காண்கிலேன்
கன்னியர் தாரகையே

மீனா : கலைமேவும் தேகம் என்னை மயக்குதே
உனையே நானும் பிரியேன்.

சபாபதி : இது நன்னாள் எனது திருவே——என்
பொன்னார் அமுத உருவே

மீனா : பிரிய மனோகரனே சல்லாபனே
நீ யல்லாதிலையே எந்நாளும் நீயல்லாதிலையே.

சபாபதி : பூவினில் வாசம்போல் என்றுமே நிலையாய்ப்
புகழாய் எப்போதும் வாழ்வோம்.

பாட்டு 2. நாகையா

(தொகையறா) : அழகான பூமிதனிலே தொழிலாளியே
உண்மைத் தியாகியே
இனிதாகவே நாம் வாழ்வோம்.

(பாட்டு) :



எல்லாம் தொழிலாலே——பயன்
எல்லாம் தொழிலாலே——நம்
உழைப்பாலே——எவ்வுயிரும்
வாழுமே புவிமேலே (எல்லாம்)
தோழர்களைத் துறந்தீரே
தொழிலாளிகளை மறந்தீரே
உயர்வான் சோலையே உயர்வான
சோலை நிறை
ஊர்களை உமக்களித்தோம் நாமே
களிப்பீர் நீரே (எல்லாம்)

(தொகையறு) : ஆடையும் சோறும் இல்லையே
அநியாய நிலை தானிதே——தினந்தோறுமே
ஓடாக நாங்கள் உழைத்தோம்——உண்ணுமலே

(பாட்டு) பசியாலே தவிக்கலாமா ? புழுப்போலே
துடிக்கலாமா ?
பாராதிருந்திடலாமா ? குறை கேளா நிலை
சரிதானு ?
இரங்காதோ நெஞ்சமே இரங்காதோ நெஞ்சமினி
ஏனே வஞ்சம் சரியோ முறையோ அறமே
இதுவோ ? (எல்லாம்)

பாட்டு 3. **சங்கர்—பத்மா.**

**(ராகம்—கரஹரப்ரியா)**

**பத்மா :** காதலினுல் உலகமே இன்பமதே
கனியித மூதனுலே சுவை சேருமே

**சங்கர் :** என்னுளம் இசை பாட உன் முக மலர்மேலே
வண்டெனத் திரிந்தாடுவேனே——மிக
மகிழ்வுடன் தேன் தேடுவேனே.

**பத்மா :** நடமிடும் மயிலாகி நலமுடனே நானும்
நளினமதாய் ஆடுவேனே

**சங்கர் :** பெருகும் பெண்மைக் கடலே

**பத்மா :** விளையும் என்தன் அமுதே

**இருவரும் :** இனி நமதாசை இனிதாக நிறைவேறுமே.

**(ராகம்—வஸந்தா)**

**பத்மா :** புது வஸந்தம் வந்தே புவிதனில் மலர் சிந்தும்
நமதுளம் அது கண்டு மகிழ்வாகுமே

**சங்கர் :** மாமணம் கமழ் தென்றல் நீ யெனவே இங்கு
வருக என்ஆருயிர் மானே

**(ராகம்—அடாணு)**



**பத்மா :** என் மணவாளனே

**சங்கர் :** நல்லிசை வாணியே

**பத்மா :** அன்பிலே

**சங்கர் :** கூடுவோம்

**இருவரும் :** இனி மனதாலே ஒன்ருகி
நாம் வாழுவோம்.

**பாட்டு 4.** **லலிதா.**

என் ஜீவனிலே——என் ஜீவனிலே
சுகம் இனிதானே ஆஹா—— (என்)
என் மனம் போலே—ஹா—என் மனம் போலே
என் மனம் போலே என் உடல் தானுடுதே (என்)
உனை வாழ்விக்கும் துணைவியும் நானென்றுதான்
மகிழ்வோடே என் கண் உனை வலைபோடுதே
என் வாய் இதம் பாடுதே
சுவை சேரும் இதழதனைத் தான் நாடுதே
ஓ உனைக் கூடும் அந்நன்னாளையே தான் தேடுதே
மணவாளன் தான்—ஹா——மணவாளன்தான்
மணவாளன் தான்——இனி——இவர் தானே ஆஹா (என்)
உனதுள்ளத்தினுள் பெருகும் அன்பென்னும் தேன்
உயிரன்பென்னும் தேன் பருகி வாழ்வேன் நிதம்
உலகில் வாழ்வேன் நிதம்
என்றும் வற்ற என் ஆசையெனும் ஊற்று தானிவர்
ஓ அதில் நானே திளைப்பேன் இதே என்றும் என் சுகம்
இதனின்பத்தால் ஹா——இதன் இன்பத்தால்
இதனின்பத்தால்——குதூஹலிப்பேனே——ஆஹா (என்)

**பாட்டு 5.** **மீனு.**

**(தொகையறு) :** புவி வாழ்வு இதோ வாழ்நாள் வீணே
சதி செய்வது நீதியு மாகாதே
சூழ்வினைதான் வாட்டுதோ தேவி உனைத்
துதி கூறும் என் துயர் தீராதா

**(பாட்டு) :** ஓ வாழ்நாள் வீணே அந்தோ இனி நான்
ஏகும் திசைதான் இருளதோ
இன்று காதல் போயின் நாளை
சோகம் ஒன்றே மீதமே
ஏனோ புவிமேல் துன்பமே——என்——
(வாழ்நாள்)



நைவதோ துயரால் சொல் நீ எனை
ஏனோ அருளாய் தேவியே
காணகிலேன் வழி எங்கியே நான்
பாடும் என் குரல் கேட்குதோ
வியாதியே சுகமாய்——என் அன்பே
மீண்டும் துணையாய் ஆவரோ
இன்று காதல் போயின் நாளை
சோகம் ஒன்றே மீதமே
ஏனோ புவிமேல் துன்பமே——என்—
(வாழ்நாள்)

வாடும் மலரைப்போலுமோ தான்
தேவி அடியேன் நானுமே
நாதனே நம் பிரேம கீதம் தன்னிலே
குறையும் நேருமோ
பாரிலே தானே—பாரிலே எல்லோரின்
துன்பம் தீர்க்கவல்லாய் தேவி நீ
இன்று காதல் போயின் நாளே சோகம்
ஒன்றே மீதமே ஏனோ புவிமேல்
துன்பமே என் —(வாழ்நாள்)



பாட்டு 6. சங்கர். (விருத்தம்)

அன்னே அனே யெனும் சிலசமயம் நின்னையே
ஐயா ஐயா என்னவே
அலறிடும் சில சமயம் அல்லாது பேய் போல
அலறியே ஒன்றும் இலவாய்ப்
பின்னேதும் அறியாமல் ஒன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடும் சிலசமயம் மேல்
பேசரிய ஒளியென்றும் வெளியென்றும் நாதாதி
பிறவுமே நிலயமென்றும்
தன்னேரிலாத தோர் அணுவென்றும்
மூவிதத் தன்மையாம்
கால மென்றும்
சாற்றிடும் சில சமயம் இவையாகி
வேறதாய்ச் சதா ஞான
ஆனந்தமாய்
என்னே எனே நின் கருணை விளையாட்
டிருந்தவாறு எம்மனோர் புகல
எளிதோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக்
குயிராகி எங்கும் நிறைகின்ற
பொருளே.



பாட்டு 7. லீலா—மோகன்.

லீலா : இசைபாடி நானுமே ஆசையாக ஆடுவேன்
மோகமாக நானுமே ப்ரேம கீதம் பாடுவேன்
ப்ரேம கீதம் பாடுவேன்—ராராராரா.

மோகன் : விசைபூட்டி என்றுமே திசை நோக்கி ஓடுவேன்
வேகமாக நானுமே காதல் இன்பம் தேடுவேன்
காதல் இன்பம் தேடுவேன்—ராராராரா.

லீலா : காதல் ததும்ப நாமே வாழும் காலம் காலம்
உனை அடையும் வாழ்வே என்றும் இன்பம் இன்பம்
ஆஹா ராஜா என் ராஜா என் ராஜா ராஜா
கண்ணும் கண்ணும் நோக்கினல் காதலாக மாறுமாம்
உன்னை மணம் செய்வதால் உள்ளம் துள்ளிப்
பாயுமாம்
துள்ளித்துள்ளிப் பாயுமாம்——ராரா ராரா

மோகன் :



என்னில் உதயமான உந்தன் காதல்
காதல்
என்னை அடையும் போதே தோணும்
இன்பம் இன்பம்
ஆஹா ராணி என் ராணி என் ராணி
ராணி
ஏகஜோதியாகவே என்னில் நீயும்
சேர்ந்ததால்
தேகம் சுடர் ஆகுதே காதலாக மாறுதே
காதலாக மாறுதே—ராரா ராரா.

லீலா : ரவி மலர்தனை முகர்வதேன் சொல் சொல் சொல்
காதல் முறையினைக் காட்டுதென்றே சொல் சொல்
சொல்
வானில் மின்னும் வெள்ளியும் உன்னைக் கண்டு
நாணுதே
உன்னைக் காண உள்ளமே எண்ணி எண்ணித்
துள்ளுதே
எண்ணி எண்ணித் துள்ளுதே——ராரா ராரா

மோகன் : வானில் தோன்றிடும் வளர் பிறை நீ அதில்
ஊடிடும் வெங்கதிர் நான்—வெங்கதிர் நான்.

இருவரும் : சேரும் இதயம் பாடும் கீதம் காதல் காதல்
சேர்ந்து மகிழ்ந்து நாமே காண்போம் இன்பம் இன்பம்
ஆஹா அன்பால் ஒன்ருகி நாம் வாழ்வோம்
வாழ்வோம்
இசைபாடி நாமுமே ஆசையாக ஆடுவோம்
மோகமாக நாளுமே ப்ரேமகீதம் பாடுவோம்
ப்ரேமகீதம் பாடுவோம்——ராரா ராரா.

பாட்டு 8. **நடனப்பாட்டு.**

**லீலாவும் கல்லூரித் தோழிகளும்.**

இந்தத் தள்ளாடும் கிழத்தாடித் தாத்தாவுக்கும் புதுக்
கல்யாணமா இது முறையாகுமா (இந்த)

சிந்தை கனியாத இளமாதை மணஞ் செய்தலால்—
இவளை மணஞ்செய்தலால்
உந்தன் அநியாயப் படுபாவம்புறம் போகுமா—
பாவம் புறம்போகுமா
உள்ளம் துள்ளாமலும் அன்பு மேவாமலும் இன்பம்
தானுகுமா—இன்பம் தானுகுமா (இந்த)

மின்னும் வலைத் தாலி கழுத்தின் பாழ் கயிருவதா—
தூக்குக் கயிருவதா
வைர நகை ஆடை பணத்தால் எம் துயர் தீருமா—
வாழ்வு இனிதாகுமா
ஜோடி சேராமலே தாகம் தீராமலே ஏகம் தானுகுமா
ஏகம் தானுகுமா (இந்த)

பாட்டு 9. **கிராமிய நடனப் பாடல்—கள்ளப்பார்ட்.**

பிரிவு 1. **குமாரி கமலா.**

**ஹார்மோனியக்காரர்** : சீதா ராமா பஜே . . . .

**ஒரு குரல் (வசனம்)** : " நிறுத்து "

**மற்றவன் (வசனம்)**: ஏ ஹார்மோனியம், பாட்டை நிறுத்தய்யா.

**வேறொருவன் (வசனம்)** : அட, பவூனை வரச்சொல்லய்யா.

**பவூன்** : தாராபுராக் குயிலே தங்கி வா நீ தாளம் கிளம்
போட்டுக்கிட்டு நடந்துவா

**ஒருவன் (வசனம்)** : ஏ பவூன், உள்ளே போய்யா.

**மற்றவன் (வசனம்)** : சரிதான் போயா, கள்ளப்பார்ட்டை வரச்
சொல்லய்யா.

பிரிவு 2.

**கள்ளப்பார்ட்டுக்காரன்:(பாட்டு)** தெக்கத்திக் கள்ளனடா, அடடடடட
டேய், நான் தெம்மதுரைப் பாண்டியண்டா,
இந்தக் கள்ள ராஜா சிங்கம்—பொழுது
டிம்மடிச்சா வருவேனடா——வருவேனடா.

(தாளவசனம்):



ஹேய்—பப்பளபள பளபளப்பள——
நாக்குலே மூக்குலே நத்துப்
புலாக்குலே
போக்கிரிப்பசங்க போகுற போக்குலே
அஜக்தான்—ஹேய் தினக்தான்—
அஜக் சம்போ சம் போக்கு லக்கடி
ஜபக்தான்.
ஹேய்
தில்லாலங்கடி—நப்பா—தில்லாலங்கடி
——ராஜா——தில்லாலங்கடி

தில்லா லங்கடி தில்லாலங்கடியே—— நயினு—
தில்லாலங்கடியே——நப்பா
தில்லா லங்கடியே——பெருத்த கில்லாடிக்
கும் குல்லாப் போடும் ஜில்லாப்
போக்கிரி நான்——வணக்கம் செய்தேன் இச்
சபைக்கே—ஹேய்.

சும்மா சும்மா நீட்டிக்கிட்டு சூட்டும் ஹாட்டும்
போட்டுக்கிட்டு ஜோப்படிக்கிற
பசங்களுக்கும் எப்புக்காட்டிப் பணம் பறிக்கும்
கேப்பு மாறிப் பயலும் நானல்ல——
எந்தொரைகளே கேடியாகத் திரிஞ்சதில்லிங்க
ஹேய்——

ஐயா டானு ஐயா டாவன்னு ஐயா டானு
டாவன்னு னு னு னவன்னு—டானு
வரிசையிலே—ஐயா டேுனு ஐயா டேவன்னு ஐயா
டேுனு டேவன்னு இப்பன்னு பூனு
டேப்புக்காட்டிப் பொளச்சதில்லிங்க.
ஹேய்.——

கோட்டைச்செவுரு பெரிசானாலும் ஓட்டை
போட்டிடுவேன் உள்ளே நான்
நோட்டம் பாத்துடுவேன்——நொளஞ்சு
தேட்டை போட்டுடுவேன்——
அப்போ——
கூட்டங்கண்டு புடிக்க வந்தா ஓட்டம்
காட்டிடுவேன்
நெடுங்கம்பி நீட்டி வந்திடுவேன்.



பிரிவு 3.

கள்ளப்பார்ட்டுக்காரனின்
மனைவி (வசனம்) : ஏ மச்சான்.
ஆமாம், இப்படியே சுத்திக்கிட்டிருந்தா
பொளப்பு தளப்பேப் பாக்கறது தான்
எப்போவாம், ஆளைப்பாரு ஆளை !

கள்ளப்பார்ட்டுக்காரன் : இல்லே ஆணு . .

மனைவி (வசனம்): ஆணுவாவது ஆவன்னுவாவது சொல்லித்தான்
தொலையேன், எம்பொட்டி மவனே !

கள் :
(பாட்டு)
உம்—ஜோக்குத்தான்———
செக்கச்செவந்த குட்டி———சீனிச்சக்கரைக் கட்டி
சீவி முடிச்ச கொண்டை
என்னமோ பண்ணுதே அன்னமே என்னையே
———நான்
தேட்டைக்குப் போகு முன்னே———சீனத்துப்
பொன்னே உன்னைச்
சேத்துப் புடிச்சுக் கொஞ்ச எண்ணுதே என்
மனம் உன்னையே

கள். மனைவி : அட எம் மம்முதராசா . . . .
மங்கை யெனக்கு வாச்ச மம்முதராசா உந்தன்
மனசு போலே உனக்குத் தந்திட்டேன்—இந்தா

கள் : உம், ஆஹா.
அத்தை மகளே உன் முகத்திலே சுகமத்தனை
யுங் கண்டேன் மொத்தத்திலே
எத்தனை யின்பம் உன் பக்கத்திலே காண்பேன்
எப்போதுமே இந்தச் சொர்க்கத்திலே

(வசனம்) : வரட்டுமா ?

கள். மனைவி : மச்சானே நானொண்ணு கேக்கட்டுமா? இல்லே
மனசுக்குள்ளே வச்சுப் பாக்கட்டுமா.

கள் : ஓஹோ சந்தேகமா என் மேல் கண்ணுட்டியே—
இனிச் சந்தோஷமாய்ச்
சொல் எம் பொண்டாட்டியே.

**கள். மனைவி :** நல்ல கொளுந்து வெத்திலேச் சருகு—வேணும்
கொண்டைக் கேத்த திருகு

**கள் :** அடி இதுக்குத்தானா பஞ்சம்—கண்ணே
பொறுத்துக்கோடி கொஞ்சம்
அடி கொச்சி மஞ்சப் பூச்சுக்காரி, தேனை விட்டுக்
கொளப்பி வச்ச பேச்சுக்காரி.

**வசனம் :** இவ்வளவுதானே ?

**கள். மனைவி :** கொண்டை முடி ரெண்டு கட்டு பூனாப்பட்டு——
வேணும்
கும்பகோணம் சேட்டுக்கடை பூந்தி லட்டு

**கள் :** அடி இன்னு மென்ன தேவையடி சொல்லிப்
போடு
ஒனக்கு இஷ்டப்படி வாங்கித்தாரேன் நான் அன்
போடு

**(வசனம்) :** சரிதான் இல்லே ?

**கள். மனைவி :** விண் ணாணம் பேசிப் பகட்டாதே சும்மா—வெத்து
வேட்டெல்லாம் கெளப்பாதே——இப்போ
மின்னுது மேகம் கறுத்திருக்கு——விடி
வெள்ளி முளைக்கு முன் வந்து சேரு——

**(வசனம்) :** ஆனா நீ ஒத்தேலே போவாதே, உங்கத்தே
மவனேயும் கூட்டிக்கிட்டுப் போ.

**கள். (வசனம்)** பருப்பில்லாக் கல்யாணமா ? போய் வரட்டா ?



**பிரிவு 4 :**

**கள். இருவர் :**

தோப்புத்தொறை ஓரங்கள்ளாம் சுத்தி
நின்னு காப்பவனே
காப்பாத்த வேணு மிப்போ, களவு
செய்யத் துணிஞ்சு நாங்க போறோம்
போயித் தலேக்கோழி கூப்பிடு முன்
வாரோம்.

### பாட்டு 10. மோகன்—லீலா கோரஸ் (வயல் பாட்டு.)

திந்தின்னு திந்தின்னு திந்தித்தானு
ஹைதோ ஹம்பா ஹைஹதோ——ஹம்
நம்ம வேலைக்குப் பழுதில்லை ராஜனே யானாலும்
சமானம் ஏதண்ணே
மண்வெட்டியாலே பூமியின் மேலே——மாறியே
மோடு டைப்போமே
பாயற மொதல் மடை நீரை நாம் வார்ப்போம்
பாயற மொதல் மடை நீரினைநாம் வார்ப்போம்
ஏருழுவோம் இனி நாமே——துயரதையே மறப்போமே
வேர்வையுதிர்த்தே வீரம் விளைத்தே—வேந்தராய்
விளங்கிடுவோமே
பலபல விரை நெல் தூவியே இன்றே
பலபல விரை நெல் தூவியுமே பின்னே
கண்ணிமை காப்பதைப் போலே தினம் காத்தே வருவோமே
(திந்தின்னு)

ஓ . . கருணை செய்யுமே கால மழையுமே——ஓ . . .
சொகுசுடன் நெல்மணி தோன்றுமேதான்
கதிரடித்தே பலன் கூட்டுவோமே——சந்தோஷமே
தரும் நாளிதுவே
சேர் உயர்ந்தே ஒன்றாய் மகிழ்ந்தே
தொண்டு செய்தே வாழுவோமே நாமெலாமே
உதய சங்கீதம் பாடி நாளும்
உதய சங்கீதம் பாடியே நாளும்
பதறிடும் பசியைப் போக்கி——ஜயமதையே பெறுவோமே
(திந்தின்னு)

### பாட்டு 11. லலிதா—பத்மினி (பரத நாட்டியம்)

**(ராகம்—வாசஸ்பதி) :**

**பல்லவி :** கலையே உயிர்த்துணையே——இன்பக்
கடல் போல் நித்யானந்த வாழ்வானதே
கதிர் போலவே அறிவு திகழ் —— (கலையே)

**அநுபல்லவி :** காரிகை கண் வெட்டிலே——உயர் ஓவியச்
சீராட்டிலே
எழிலுடன் விளையாடி——இயல் இசை உருவாகி
கருத்தெலாம் தேனாக——பாடி நடமிடும் புது
மையில் (கலையே)

(ராகம்—தீபகம்)

சரணம் :



கம்பன் கவி எட்டிலே——கம்பனின்
கவி எட்டிலே——வாணி
களி நடம் தானுடினாள்
காவியச் சிலம்பான இளங்கோவன்
பாவாலே
கவிராஜ வடிவாகி புவி மீதிலே——
இனிமையது தரும்



நாதம் தனிலே உதித்திடும் கலையே
மதகரிக ஜெம் தகிடவென
கீதம், எழுந்திடும் சுரலயம்
தாஸகரிக மா கரிஸரிகாமா ஸகஸ
என்றே ஒலித்தே குயிலினிசையும்
மயிலினடம்தாம்
ததிங்கினதாம் தித்தாம் ததிங்கின
தாம் கா மா பா என முழங்கும்——
(கலையே)

**பாட்டு 12. ரத்னம்——தங்கம் (காமிக் டுயட்.)**

**ரத்னம் :** நல்ல பெண்பிள்ளே கிட்டே ஆண்பிள்ளே அதி
காரஞ்செல்லாது
இவன் எம்புட்டுத்தான் படிச்சிருந்தாலும்
எழுதப்படிக்கத் தெரிஞ்சவளான (பெண்)

**தங்கம் :** நல்ல ஆண்பிள்ளே யில்லா பெண் பிள்ளே
வாழ்விலே இன்பம் ஏது ?
எம்புட்டுத்தான் படிச்சிருந்தாலும் இல்லற
மல்லது—நல்லற மில்லே

**ரத்னம் :** சமத்துவமின்னு சொல்லிக்கிறுங்க சரி நிகர்
சமானமாக——ஆண் பெண் சரிநிகர் சமான
மாக—

**தங்கம் :** ஆணு சரிதான் அதுவே உண்மையின்னு
ஆம்பளே போலே பொம்பளே ரிக்ஷா

**(வசனம்) :** வண்டியிழுப்பாளா ? சம்மட்டி அடிப்பாளா?
இல்லே
துப்பாக்கி எடுப்பாளா? ஊம் ஹூம் முடியாது.

ரத்னம். (வசனம்) : என் முடியாது? செய்யக்கூடாது.

(பாட்டு) : வண்டியிழுப்பதும் சண்டை செய்வதும் சம்மட்டி
யடிப்பதும் கூடாது——
பெண்—சம்மட்டியடிப்பதும் கூடாது——அவ
படிச்சிருந்தாலும் இல்லாவிட்டாலும் குடுத்
தனம் செய்யும் குணமுள்ள நல்ல
(பெண்)

தங்கம் : பணத்தினாலே நாகரீகப் பகட்டுக்காரி ஜம்பம்——
வீண்



பகட்டுக்காரி ஜம்பம்——இதில்
பஞ்சாயத்தே இல்லே——கையில் பண
மில்லாட்டி துன்பம்——கையில்
பணமில்லாட்டி துன்பம்——புருஷன்
குணத்தைத் தெரிஞ்சி நடந்துகிட்டா
குடுத்தனத்துலே இன்பம்.—அந்தக்
குடுத்தனத்துலே இன்பம்
கண்ணாளன்தானே கடவுள் எந்நாளும்
தானே——ஆசை (கண்)

ரத்னம் : ஆம்பிளேக்கு மேலே பெண்கள் அதிகம் படிக்கி
றாங்க—இப்போ அதிகம் படிக்கிறாங்க
ஹைக்கோர்ட்டு ஜட்ஜு வக்கீல் வேலே பாக்கு
றாங்க—டைப்புரைட்டு மடிக்கிறாங்க
அயல் நாட்டு ஸ்தானிகராய் அமர்ந்து மிருக்கி
றாங்க—பெண்கள் அமர்ந்து மிருக்கிறாங்க.

(வசனம்) : இது மட்டுமா, பட்டாளத்துலே சேர்ந்து சண்டை
பளகிக்கிறாங்க
பட்டணத்துலே டாக்டர் வேலே படிச்சுக்கிறாங்க—
சட்ட சபையில் மெம்பராகச் சேர்ந்திருக்காங்க
ஸரிகமாவும் பெண்களுக்குச் சொல்லித்
தராங்க——இன்னும் மோட்டார் ஓட்டறாங்க—
சைக்கிள் விடறாங்க
பாட்டுப்படிக்கிறாங்க——நாட்டுக்குப் பாடும்
படறாங்க——இதிலே

பாட்டு : ஆம்பளே மாத்திரம் என்னடி ஒசத்தி?
நீ ஆலோசனே பண்ணிப்பாரு


சொஸைட்டி
பிக்சர்ஸாரின்